எம்.சி.ஓ.பி எண்: 4504/2025 தேதி: 04.06.2026

மசா. : 1

பெயர் : Nizampuram Praveen Kumar

த/பெ. : Pandurangam

வயது :62

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 18 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 4 ஆவணம் மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பி.காம் வரை படித்துள்ளேன். தற்பொழுது வேலை செய்யவில்லை. எனக்கு பிரனய் என்ற மூத்த மகன் இருக்கிறார். அவர் திருமணம் ஆகி தனியாக வசிக்கிறார். தனியாக தொழில் செய்துவந்தார். என் மனைவிக்கும் சேர்த்து பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நானும் என் மனைவியும் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்தை பார்த்தவர் சொல்லிதான் தெரிந்துகொண்டோம். விபத்து நடந்த அன்று சுபம் என்பவர் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றார். என்னுடைய மகன் பின்னால் அமர்ந்து சென்றார். சுபம் என்பவர் இந்த வழக்கில் ஒரு தரப்பினர் அல்ல. மேற்படி சுபம் என்பவர் அஜாக்கிருதையாக இருசக்கரவாகனத்தை ஓட்டியதால் விபத்து நடந்தது என்று மனுவில் கூறியிருக்கிறேன். சுபம் என்பவரும் என் மகனும் தலைக்கவசம் அணிந்திருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அது பற்றி என்னால் கூறமுடியாது. சுபம் என்பவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. சுபம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. மீண்டும் சாட்சி என் மகனுடைய நண்பர்கள் சுபம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பதாக அவருக்கு இருசக்கரவாகனங்கள் இருப்பதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அவருடைய ஓட்டுநர் உரிமத்தை பார்த்தது இல்லை. என் மகன் அவராகதான் சுபம் என்பவரின் இருசக்கரவாகனத்தில்

சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுபம் என்பவரின் அஜாக்கிருதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் சுபம் என்பவர்தான் இழப்பீடு தரவேண்டும் என்றாலும் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. என் மகன் பல் மருத்துவ படிப்பில் எம்எஸ் முடித்துள்ளார்.அவர் படித்துகொண்டிருந்தபோதே மாலை நேரங்களில் பல் மருத்துவ சிகிச்சை செய்துவந்தார். அவருடைய வருமானம் சம்பந்தமாக நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் மகனின் இறுதி சடங்கு செலவாக நான் ரூபாய் 2 லட்சம் மனுவில் குறிப்பிட்டுள்ளேன். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் என்னுடைய மகனின் சடலத்தை சென்னையிலிருந்து ஐதராபாத்துக்கு விமானம் மூலம் கொண்டுசென்றேன். ஆனால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அவசியமான தரப்பினரை இந்த மனுவில் சேர்க்காததால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

X

சாட்சிக்கு தெலுங்கு மொழி மட்டுமே தெரியும் என்பதால் கேட்கப்படும் கேள்விகள் சாட்சிக்கு தெலுங்கு மொழியில் வழக்கறிஞர் திரு. ஜெயராமன் Enrl. No: 1459 /2015 என்பவரால் விளக்கப்பட்டு மொழிப்பெயர்க்கப்பட்டு சாட்சியின் சாட்சியம் நீதிமன்றத்தில் எடுத்துரைத்து பதிவு செய்யப்படுவதை இரு தரப்பு வழக்கறிஞரோடு ஒப்புக்கொண்ட நிலையில் சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

X

மொழிப்பெயர்பாளர் கையொப்பம்

<u>மறுவிசாரணை இல்லை</u>

x

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு தெலுங்கில் வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.